# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

*************

மனு எண்: 747/2017/ஊராட்சி

ஆணை எண்: 136/2017

நாள்: 30/05/2017

S. ரஜீஸ் குமார்,
1/97, வடசங்கேந்தி,
ஆரியலூர் அஞ்சல் – 614 702. – மனுதாரர்

எம். உமேஷ் பாபு,
முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்,
வடசங்கேந்தி,
திருவாரூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

## ஆணை

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை, ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட, வடசங்கேந்தி ஊராட்சியில் வசிக்கும் திரு. S. ரஜீஸ் குமார், அவரது 23.5.17 நாளிட்ட மனுவில், ஊராட்சி மன்ற தலைவராக இருந்த திரு. எம். உமேஷ்பாபு, பல போலி ஆவணங்களை தயாரித்து ஊராட்சிகள் சட்ட விதிகளுக்கு புறம்பாக செயல்பட்டு, ஊராட்சி நிதியை பெருமளவில் எடுத்து தனது சுயலாபத்திற்கு பயன்படுத்தியுள்ளார் என்றும், 2011-16 வரையுள்ள நிதி ஆண்டுகளில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரால் கீழ்கண்ட முறைகேடுகள் செய்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்:-

1) கை பம்பு ரிப்பேர் செலவு – ரூ.3,10,029
2) விசை பம்ப் கூலி, பொருட்கள் செலவிற்காக கூடுதலாக செலவிடப்பட்டது – ரூ.2,87,738/-
3) அனுமதிக்கப்பட்ட தொகையைவிட கூடுதலாக மின் உபகரணங்கள் செலவு – ரூ.2,55,244/-
4) டெண்டர் இல்லாமல் மின் பொருட்கள் (ம) பம்புகள் வாங்கிய செலவு – ரூ.1,65,640/-
5) ஊராட்சி மன்ற தலைவர் பெயரில் காசோலை வழங்கி கையாடல் செய்தது – ரூ.15,74,200/-
ரூ. 47,100

மேற்கண்டவாறு பல்வேறு முறைகேடுகள் புரிந்த முன்னாள் ஊராட்சி தலைவர் திரு. எம். உமேஷ்பாபு மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. இம்மனு வட சங்கேந்தி ஊராட்சியை சார்ந்தது ஆகும். எனவே இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 30-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்
S. ரஜீஸ் குமார்,
1/97, வடசங்கேந்தி,
ஆரியலூர் அஞ்சல் – 614 702,
திருத்துறை பூண்டி தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.
நகல்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருவாரூர் மாவட்டம்,
திருவாரூர்.